# கூப்பன் மாதிரியை மக்களுக்கு விநியோகம் செய்யக்கூடாது

## தேர்தல் ஆணையம் உத்தரவு

**சென்னை, ஏப்.16:** சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன. இதற்கிடையே, கோவை தெற்கு, பர்கூர், பாலக்கோடு உள்ளிட்ட தொகுதிகளில் தேர்தல் நடத்தை விதிகளை மீறி வாக்காளர்களுக்கு கூப்பன் வழங்கி வருவதாக தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்பேரில், தேர்தல் ஆணையம் சம்பந்தப்பட்டவர்கள் மீது விரைவான நடவடிக்கை எடுத்து, இதுவரை வழங்கப்பட்ட கூப்பன்களை பறிமுதல் செய்து நேர்மையாக தேர்தல் நடத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தது.

இந்நிலையில், இது தொடர்பாக, தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் அளித்துள்ள விளக்கத்தில், தேர்தல் ஆணையம் வழங்கிய அந்த சான்றிதழ், மின்னணு ஊடகங்களில் விளம்பரங்களை ஒளிபரப்புவதற்காக வழங்கப்பட்டது. அச்சிடப்பட்ட பிரசுரங்களுக்கு பயன்படுத்துவதற்கு இது பொருந்தாது. இவ்வாறு அதில் பதிவிட்டுள்ளது.

## தேர்தல் பணியாளர்களுக்கு 2ம் கட்ட பயிற்சி








▶ சட்டமன்ற தேர்தலின்போது வாக்குச்சாவடிகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கான 2ம் கட்ட பயிற்சி முகாம் நேற்று நடந்தது. சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள பெண்கள் மேல்நிலை பள்ளியில் நடந்த முகாமில், வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வி.வி.பேட் கருவியின் செயல்பாடு குறித்து விளக்கப்படுகிறது. அடுத்த படம்: திருவொற்றியூர் வெள்ளையன் செட்டி பள்ளியில் தபால் வாக்களித்த வாக்குப்பதிவு அலுவலர்கள். கடைசி படம்: செம்மஞ்சேரியில் உள்ள தனியார் கல்லூரியில் தபால் வாக்களித்த தேர்தல் பணியாளர்கள்.

---

### கிறிஸ்தவர்களுக்கு எதிரான எப்சிஆர்ஏ சட்ட திருத்தம்

# ஒன்றிய பாஜ அரசுக்கு எதிராக சிறிய எதிர்ப்புகூட காட்டாத ஜோசப் விஜய்

## திமுக பக்கம் சாயும் சிறுபான்மையினரின் வாக்கு வங்கி

**சென்னை, ஏப்.16:** கிறிஸ்தவர்களுக்கு எதிராக ஒன்றிய பாஜ அரசு கொண்டு வந்துள்ள எப்சிஆர்ஏ சட்ட திருத்தத்துக்கு எதிராக ஒரு சிறு எதிர்ப்பு கூட நடிகர் ஜோசப் விஜய் காட்டாததால், சிறுபான்மையினரின் வாக்கு வங்கி திமுக பக்கம் சாய்வதாக அரசியல் விமர்ச்சகர்கள் கருதுகின்றனர்.

தமிழ்நாட்டில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் அரசியல் தலைவர்களின் அதிரடி பிரசாரத்தால் தேர்தல் களம் களைகட்டியுள்ளது. வாக்குப் பதிவுக்கு இன்னும் 7 நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், வெற்றியை தக்கவைக்க அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசாரத்தை தீவிரப்படுத்தியுள்ளன.

திமுக, அதிமுக, நாம் தமிழர், தவெக, ராமதாஸ்-சசிகலா என 5 முனை போட்டி நிலவி வரும் சூழ்நிலையில், சமூக அமைப்புகள், வணிக அமைப்புகள், பல்வேறு இயக்கங்கள் என பல அமைப்புகள் தங்கள் ஆதரவு யாருக்கு என்பதை முக்கிய கட்சிகளின் தலைவர்களை சந்தித்து தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டு தேர்தல்களில் சிறுபான்மையின மக்களின் வாக்குகள் என்பது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்படுகிறது. அவர்களின் ஆதரவு எந்த கட்சிக்கு கிடைக்கும் என்ற விவாதங்கள் ஒவ்வொரு தேர்தல்களிலும் முக்கியத்துவம் பெறும். அந்த வகையில் 2026 சட்டமன்ற தேர்தலிலும் சிறுபான்மையின வாக்குகள் யாருக்கு கிடைக்கும் என்ற விவாதங்கள் அனல் பறந்து வருகிறது.

அந்த வகையில், சமூகத்தின் எதிர்காலத்திற்கு பாதுகாப்பான கரங்களை தேர்ந்தெடுப்பதில் சிறுபான்மையின அமைப்புகள் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக ஒன்றிய பாஜ அரசின் எப்சிஆர்ஏ சட்ட திருத்தம் சிறுபான்மையின மக்களிடையே கவலையையும், அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. வெளிநாட்டு நிதி பெறும் கல்வி, மருத்துவ நிறுவனங்களின் உரிமம் ரத்தானால், அந்த சொத்துக்களை அரசே கையகப்படுத்தும் என்ற சட்டம் சிறுபான்மையினரின் சொத்துக்களை பறிக்கும் முயற்சி என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமருக்கு அவர் கடிதம் எழுதியுள்ளதோடு, நாடாளுமன்றத்திலும் திமுக எம்பிக்கள் எதிர்ப்பு தெரிவிக்கவும் உத்தரவிட்டுள்ளார். இந்த சட்டம் கிறிஸ்தவர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், முதல்வரின் கடுமையான கண்டனங்கள் அவர்களுக்கு ஒரு ஆதரவை தருவதாக உள்ளது.

ஆனால், புதிதாக கட்சி தொடங்கி தேர்தலை சந்திக்க உள்ள நடிகர் விஜய், கிறிஸ்தவ வாக்குகளை பிரிப்பார் என்று பரபரப்பாக பேசப்பட்டது. அதற்காக, இதுவரை வெளியில் தெரியாத விஜய் என்ற தனது பெயருக்கு முன்னால் சான்றிதழில் உள்ள ஜோசப் என்ற பெயருடன் சேர்த்து தேர்தலுக்காக ஜோசப் விஜய் என்று உச்சரித்து வருகிறார்.

இதனால் சிறுபான்மையினருக்கு ஆதரவாக இருப்பாரா? என்ற கேள்விகள் எழுந்த போது, நடிகர் விஜய் கிறிஸ்தவர்களுக்கு எதிரான இந்த சட்டத்தை பற்றி எந்தவிதமான எதிர்ப்பும் இதுவரை தெரிவிக்கவில்லை. இது கிறிஸ்தவர்கள் மத்தியில் விஜய் மீதான எதிர்ப்பையே காட்டியுள்ளது.



அதுமட்டுல்ல, கிறிஸ்துமஸ் அன்று நாடு முழுவதும் 700 இடங்களில் கிறிஸ்தவர்கள், தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்ய வலியுறுத்தி திமுக, விசிக, காங்கிரஸ், மதிமுக, மமக, கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சியினர், திராவிடர் கழகத்தினர் என பல்வேறு அமைப்புகளும், கட்சிகளும் போராட்டங்களில் ஈடுபட்டபோது கூட, வெளியே வராமல் வெறும் அறிக்கையோடு நிறுத்திக்கொண்ட விஜயை எப்படி நம்புவது என்பது கிறிஸ்தவ மக்களின் மில்லியன் டாலர் கேள்வியாக உள்ளது.

இதற்கிடையே, இஸ்லாமிய கட்சிகள், இயக்கங்கள், சிறு அமைப்புகள் ஏற்கனவே திமுக ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துவிட்டன. கடந்த தேர்தலில் எதிரணியில் இருந்த இஸ்லாமிய கட்சிகள் கூட இம்முறை திமுகவுடன் கூட்டணி வைத்துப் போட்டியிடுகின்றன. பிரதான கூட்டணிகளில் அதிக எண்ணிக்கையிலான இஸ்லாமியர்கள் போட்டியிடுவது திமுக கூட்டணியில் தான். அதே போன்று தற்போது கிறிஸ்தவ மக்களின் ஆதரவும் திமுகவுக்கே முழுமையாக கிடைக்கும் என்பது அரசியல் விவாதங்களில் பரபரப்பாக பேசப்படும் ஒன்றாக உள்ளது.

கிறிஸ்தவர்களுக்கான பிரத்யேக நலத்திட்டங்கள், புதிய வாக்குறுதிகள், சிறுபான்மையினருக்கு எதிரான ஒன்றிய அரசின் நடவடிக்கைகளை எதிர்க்கக் கூடிய பலம்பொருந்திய கூட்டணி, சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களுக்கு எதிரான திமுக கூட்டணியின் நிலைப்பாடுகள் என கிறிஸ்தவர்கள், இந்த கூட்டணியை ஆதரிக்க பல காரணங்கள் இருக்கின்றன.

கொள்கை தெளிவற்ற, தீர்க்கமான எதிர்ப்பை பதிவு செய்யாத புதிதாக களத்துக்கு வந்துள்ள விஜய் கட்சியை நம்புவதைவிட, தமிழ்நாட்டளவில் திமுகவையும், இந்திய அளவில் காங்கிரஸையும் ஆதரிக்கவே சிறுபான்மையினர் விரும்புகின்றனர் என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

இதுகுறித்து கிறிஸ்தவ பேராயர் ஒருவர் கூறியதாவது:

தமிழ்நாடு அரசு கடந்த 5 ஆண்டுகளில் கிறிஸ்தவர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள், பணியாளர்களின் சமூக பாதுகாப்பிற்காக தனி நல வாரியம் அமைக்கப்பட்டதுடன், பழமையான தேவாலயங்களை புதுப்பிக்கும் நிதியை ரூ.10 கோடியாக உயர்த்தியது. மகளிர் உதவும் சங்கங்கள் மூலம் பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளும், சிறு வணிகர்களுக்கு குறைந்த வட்டி கடன்களும் வழங்கப்பட்டன.

சிறுபான்மையினர் தொழில் தொடங்க தாம்கோ மூலம் கடன் பெறும் உச்சவரம்பின் அளவு ரூ.30 லட்சமாக உயர்த்தப்படும் என்று தற்போது திமுக தனது வாக்குறுதியும் அளித்துள்ளது. தேர்தல் அறிக்கையில் மேலும் பல நம்பிக்கையூட்டும் வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. புதிய தேவாலயங்கள் கட்ட அனுமதி பெறும் நடைமுறை எளிதாக்கப்படும்.

மாணவர்களின் உயர்கல்விக்காக அயலக கல்வி உதவி திட்டம், ஆண்டுதோறும் 25,000 இளைஞர்களுக்கு நவீன தொழில் பயிற்சி போன்ற திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் வரும் காலங்களில் திமுக செய்யும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருப்பதால் தான் நாங்கள் திமுகவை ஆதரிக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

---

முதல்வர் குறித்து அவதூறு

# இபிஎஸ் பிரசாரத்திற்கு தடைகோரி புகழேந்தி வழக்கு

## உயர் நீதிமன்றத்தில் விரைவில் விசாரணை

**சென்னை, ஏப்.16:** தமிழக முதல்வர் குறித்து அவதூறாக பேசிய அதிமுக பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் பிரசாரத்திற்கு தடை விதிக்க கோரி, பெங்களூரு புகழேந்தி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

புரட்சி அதிமுகவின் முதன்மை செயலாளர் பெங்களூரு புகழேந்தி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், சட்டமன்ற தேர்தல் பிரசாரத்தின் போது, அதிமுக பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி, முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எதிராக அவதூறு பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். இதேபோல், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினையும் அவதூறாக பேசி வருகிறார். இருவரின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து தேர்தல் பிரசாரத்தில் எடப்பாடி பழனிசாமி பேசி வருகிறார்.

இதுதவிர பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களையும் அவதூறாக பேசிவருகிறார். எனவே, தேர்தல் பிரசாரத்தின் போது தொடர்ந்து அவதூறு பரப்பி, தனிப்பட்ட வாழ்க்கை குறித்து பேசி வரும் எடப்பாடி பழனிசாமி மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட வேண்டும். அவர் தேர்தல் பிரசாரம் செய்ய தடை விதிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.



இந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மதிகாரி மற்றும் ஜி.அருள்முருகன் அமர்வு முன்பு விரைவில் விசாரணைக்கு வர உள்ளது.

---

## நிறுவனங்கள் (கூட்டிணைப்பு) விதிகள், 2014

**படிவம் எண். INC-26**

[2014 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் (கூட்டிணைப்பு) விதிகள் 30 இன் படியான பொது அறிவிப்பு]

மத்திய அரசு, மண்டல இயக்குநர், கார்ப்பரேட் விவகார அமைச்சகம், தென் மண்டலம், சென்னை அவர்களின் முன்பாக

நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 13 இன் துணைப் பிரிவு (4) மற்றும் நிறுவனங்களின் (கூட்டிணைப்பு) விதிகள்,2014 இன் விதி 30 –இன் துணை விதி (5) இன் உட்பிரிவு (a) தொடர்பாக

மற்றும்

பதிவு அலுவலகத்தை எண்.33, பசுமார்த்தி தெரு, கோடம்பாக்கம், சென்னை–600024 என்ற முகவரியில் பதிவு அலுவலகத்தைக் கொண்டிருக்கும் கோகனட் குரோவ்ஸ் ஹாலிடே ரிசார்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (CIN:U01119TN1980PTC008447) நிறுவனம் தொடர்பாக (மனுதாரர்)

பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், இந்நிறுவனம் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை "தமிழ்நாடு மாநிலத்திலிருந்து" "கர்நாடக மாநிலத்திற்கு" மாற்றிக்கொள்ளும் வகையில், 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதி நடைபெற்ற சிறப்புப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தின் அடிப்படையில், நிறுவனத்தின் குறிப்பாணையில் செய்யப்படவுள்ள மாற்றத்திற்கு மத்திய அரசின் ஒப்புதலைக் கோரி, நிறுவனங்கள் சட்டம், 2013–இன் பிரிவு 13–இன் கீழ் மத்திய அரசிடம் விண்ணப்பிக்க உத்தேசித்துள்ளது. நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை மாற்றும் இந்த முன்மொழியப்பட்ட நடவடிக்கையால் எவருடைய நலன்களேனும் பாதிக்கப்படக்கூடும் எனில், அத்தகைய நபர் தனது ஆட்சேபணைகளை ஒரு பிரமாணப் பத்திரத்தின் துணையுடன் சமர்ப்பிக்கலாம். அந்தப் பிரமாணப் பத்திரத்தில், தனது நலன்களின் தன்மை மற்றும் இந்த மாற்றத்தை எதிர்ப்பதற்கான காரணங்களை அவர் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இந்த ஆட்சேபணைகளை எம்சிஏ 21 இணையதளத்தில் (www.mca.gov.in) 'முதலீட்டாளர் குறைதீர்ப்புப் படிவத்தை' பூர்த்தி செய்வதன் மூலமோ அல்லது பின்வரும் மண்டல இயக்குநர், தெற்கு மண்டலம், கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம், பிளாக் எண். 6, B பிரிவு, 5 ஆவது தளம், சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600006, தமிழ்நாடு என்ற முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலமாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் மேற்கண்டவாறு ஆட்சேபணைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், அந்தப் பிரமாணப் பத்திரத்தின் ஒரு நகலை, மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள விண்ணப்பதார நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்திற்கும் அனுப்ப வேண்டும்.

கோகனட் குரோவ்ஸ் ஹாலிடே ரிசார்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
(கே.எல்.ஸ்வாமி)
இயக்குநர் – DIN: 00228860

தேதி: 15.04.2026
இடம்: சென்னை

## நிறுவனங்கள் (கூட்டிணைப்பு) விதிகள், 2014

**படிவம் எண். INC-26**

[2014 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் (கூட்டிணைப்பு) விதிகள் 30 இன் படியான பொது அறிவிப்பு]

மத்திய அரசு, மண்டல இயக்குநர், கார்ப்பரேட் விவகார அமைச்சகம், தென் மண்டலம், சென்னை அவர்களின் முன்பாக

நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 13 இன் துணைப் பிரிவு (4) மற்றும் நிறுவனங்களின் (கூட்டிணைப்பு) விதிகள்,2014 இன் விதி 30 –இன் துணை விதி (5) இன் உட்பிரிவு (a) தொடர்பாக

மற்றும்

பதிவு அலுவலகத்தை எண்.33, பசுமார்த்தி தெரு, கோடம்பாக்கம், சென்னை–600024 என்ற முகவரியில் பதிவு அலுவலகத்தைக் கொண்டிருக்கும் பார்சன் ஹாலிடே ரிசார்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (CIN:U24231TN1981PTC009116) நிறுவனம் தொடர்பாக (மனுதாரர்)

பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், இந்நிறுவனம் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை "தமிழ்நாடு மாநிலத்திலிருந்து" "கர்நாடக மாநிலத்திற்கு" மாற்றிக்கொள்ளும் வகையில், 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதி நடைபெற்ற சிறப்புப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தின் அடிப்படையில், நிறுவனத்தின் குறிப்பாணையில் செய்யப்படவுள்ள மாற்றத்திற்கு மத்திய அரசின் ஒப்புதலைக் கோரி, நிறுவனங்கள் சட்டம், 2013–இன் பிரிவு 13–இன் கீழ் மத்திய அரசிடம் விண்ணப்பிக்க உத்தேசித்துள்ளது. நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை மாற்றும் இந்த முன்மொழியப்பட்ட நடவடிக்கையால் எவருடைய நலன்களேனும் பாதிக்கப்படக்கூடும் எனில், அத்தகைய நபர் தனது ஆட்சேபணைகளை ஒரு பிரமாணப் பத்திரத்தின் துணையுடன் சமர்ப்பிக்கலாம். அந்தப் பிரமாணப் பத்திரத்தில், தனது நலன்களின் தன்மை மற்றும் இந்த மாற்றத்தை எதிர்ப்பதற்கான காரணங்களை அவர் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இந்த ஆட்சேபணைகளை எம்சிஏ 21 இணையதளத்தில் (www.mca.gov.in) 'முதலீட்டாளர் குறைதீர்ப்புப் படிவத்தை' பூர்த்தி செய்வதன் மூலமோ அல்லது பின்வரும் மண்டல இயக்குநர், தெற்கு மண்டலம், கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம், பிளாக் எண். 6, B பிரிவு, 5 ஆவது தளம், சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600006, தமிழ்நாடு என்ற முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலமாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் மேற்கண்டவாறு ஆட்சேபணைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், அந்தப் பிரமாணப் பத்திரத்தின் ஒரு நகலை, மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள விண்ணப்பதார நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்திற்கும் அனுப்ப வேண்டும்.

பார்சன் ஹாலிடே ரிசார்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
(கே.எல்.ஸ்வாமி)
இயக்குநர் – DIN: 00228860

தேதி: 15.04.2026
இடம்: சென்னை

---

### வரும் 21ம் தேதி

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - ராகுல் ஒரே மேடையில் பிரசாரம்

## மல்லிகார்ஜூன கார்கே 20ல் குமரியில் பிரசாரம்

**சென்னை, ஏப்.16:** திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, வரும் 21ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின்- ராகுல் ஒரே மேடையில் பிரசாரம் செய்ய உள்ளனர். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே 20ல் கன்னியாகுமரியில் பிரசாரம் செய்ய உள்ளார்.

தேர்தல் பிரசாரம் வரும் 21ம் தேதியுடன் முடிவடைய உள்ள நிலையில், அனைத்து கட்சிகளின் வேட்பாளர்களும், தலைவர்களும் அனல் பறக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் - ராகுல்காந்தி ஒரே மேடையில் தோன்றுவார்களா என்ற எதிர்பார்ப்பு அரசியல் ஆர்வலர்கள் மத்தியில் அதிகமாக உள்ளது.

ஆனால் ராகுல் காந்தியின் தமிழக வருகைக்கான தேதி இறுதி செய்யப்படாமல் இருந்தது. முதல்வரின் பிரச்சாரத்துக்கு ஏற்றவாறு தேதியை முடிவு செய்வதற்கான நடவடிக்கையில் காங்கிரஸ் தலைமை இறங்கியுள்ளது.

இதற்கிடையே இன்று முதல் வரும் 18ம் தேதி வரை நாடாளுமன்றத்தில் பெண்களுக்கன 33 சதவீத இடஒதுக்கீடு மற்றும் நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவது தொடர்பான சட்ட முன்வடிவு பற்றிய விவாதம் தொடங்குகிறது. இதனால் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோர் நாடாளுமன்ற கூட்டத்தில் பங்கேற்க வேண்டிய சூழல் உள்ளது.

இதனால் தமிழக சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் மேலிட தலைவர்களின் பிரசாரத்தை 20, 21ம் தேதிகளில நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. வரும் 20ம் தேதி காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே கன்னியாகுமரி பொதுக்கூட்டத்தில் திமுக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்கிறார்.

அதை தொடர்ந்து, 21ம் தேதி ராகுல்காந்தி தமிழகம் வருகிறார். அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் - ராகுல் காந்தி ஆகியோர் ஒரே மேடையில் திமுக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டுகின்றனர். ஆனால் எந்த இடம் என்பது இன்னும் முடிவாகவில்லை என்று காங்கிரஸ் மேலிட தலைவர்கள் கூறினர்.



---

### சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு

# அதிக சுயாட்சி உரிமை அளித்த திமுகவுக்கு எங்கள் முழு ஆதரவு

## பேராயர் ஏ.எம்.சின்னப்பா தகவல்

**சென்னை, ஏப்.16:** சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு அதிக சுயாட்சி கொடுத்த திமுகவுக்கு, வரும் சட்டமன்ற தேர்தலில் எங்கள் முழு ஆதரவு, என பேராயர் ஏ.எம்.சின்னப்பா தெரிவித்துள்ளார்.

சென்னை மயிலை முன்னாள் பேராயர் ஏ.எம்.சின்னப்பா நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

கடந்த 5 ஆண்டுகளாக சிறுபான்மையினருக்கும், எங்களுக்கும் உறுதுணையாக இருந்து, எங்களுடைய தேவைகள், நமது நாட்டின் சட்டத்தில் இருக்கிற உரிமைகளை வென்று எடுக்கின்ற வகையில் எங்களுக்கு எல்லாவிதமான உரிமைகளை வழங்கி பாதுகாத்து திமுக அரசு வழிநடத்தி வருகிறது.

திமுக தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறுபான்மையினருக்கு உறுதுணையாக இருந்து வருகிறார். தேவாலயங்களின் பாதுகாப்பு மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றிக்கு மானியம் தருகிறார்.

தேவையான கல்லறை தோட்டங்கள் அமைத்து தருகின்றனர். கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்கி இருக்கிறார்.

கிறிஸ்துமஸ் பரிசு வழங்கும் உரிமையை உறுதிபடுத்தி இருக்கிறார். கல்வி நிறுவனங்களுக்கு அதிக சுயாட்சி தருவதற்கு ஏற்பாடு செய்துள்ளார். கூடுதலாக கிறிஸ்துமஸ் விழாக்கள், சிறுபான்மை விடுதி, மாணவர்களுக்கு சிறப்பு உணவு, மதுரை, தேனி உள்ளிட்ட மாவட்டங்களில் புதிய கிறிஸ்தவ சந்தங்கள் அமைத்து கொடுத்துள்ளார். எங்கள் நிறுவனங்கள் மூலம் பயன்பெறுகின்ற அத்தனை மக்கள் சார்பாக நான் பேசுகிறேன்.



கடந்த 5 ஆண்டுகளாக, எங்களுடன் தோள் கொடுத்து, எங்களுடைய கவலைகள் எல்லாம் நீக்கி, எங்களுடன் பயனித்து எங்களுக்கு எல்லா உதவிகளையும் செய்து வரும் திமுக தலைவருக்கு மீண்டும் ஒரு முறை எங்களது ஆதரவை அளித்து, அவர் மீண்டும் அரசு அமைத்தால் நன்றாக இருக்கும் என்ற ஒரு உறுதிபாட்டினை எடுக்கின்ற நிலையில் நாங்கள் இப்போது இருக்கிறோம். எனவே, வரும் தேர்தலில் திமுகவை ஆதரிக்கிறோம்.

தொகுதி மறுசீரமைப்பு, மக்கள் தொகை அடிப்படையில் நடந்தால் தமிழ்நாட்டுக்கு பாதிப்பு ஏற்படும். எனவே அதை ஒன்றிய அரசு கைவிட வேண்டும்.

இவ்வாறு பேராயர் ஏ.எம்.சின்னப்பா தெரிவித்தார்.

---


## ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிட்.

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

CIN: U67100TZ2014PTC020363
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் ஸ்கொயர், 47வது தளம், N.C. கேல்கர்மார்க் R.G.கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை-400028.
பதிவு அலுவலக முகவரி: எண்.9, எம்.பி. நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர்-641607
மின்னஞ்சல்:vm.divakaran@omkaraarc.com,
அதிகாரபூர்வ அதிகாரி: கைபேசி எண்.: +91 9344684194/ 9884062068/ 99623 33307.

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்து மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) r/w 9(1) விதிகளுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 ("சர்பாசி சட்டம்") கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்கீழ் பெயரிடப்பட்ட கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்கள் ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, அது ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (OARPL), மேலும் கீழே உள்ள கணக்குகளின் முழு நிலுவையில் உள்ள கடன்களையும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (OARPL) (ஓம்காரா PS 06/2021–22 ட்ரஸ்ட் ஒப்பந்தங்கள் மூலம் பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படும்) இன்டஸ்இன்ட் பேங் லிமிடெட் (உரிமையீந்தோர் வங்கி) வசமிருந்து 25.06.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஒஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஒஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப–கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஒஏஆர்பிஎல்–க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

| | |
|---|---|
| கடன்தாரர்கள்& உப கடன்தாரர்களின் பெயர் | திரு.N.இளங்கோ (கடன்தாரர்) மற்றும் திருமதி. அருணா.E (உப–கடன்தாரர்) |

கடனீட்டு சொத்து விவரங்கள்:
கோடம்பாக்கம் சார் பதிவு அலுவலகத்தில் 01.12.2005 தேதியிட்ட விற்பனை பத்திரம் எண்.4845/2005 இன்படி திரு. N.இளங்கோ, த/பெ, திரு. T.G.நித்தியானந்தம் சொந்தமான சொத்து.
அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள சொத்து. பிளாட் எண்.E, தரைத்தளம், ப்ரியா அபார்ட்மென்ட்ஸ், பழைய கதவு எண்.105, புதிய கதவு எண்.192 (சொத்து வரி மதிப்பீட்டின்படி கதவு எண்.105A/6), ரங்கராஜபுரம் பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை–600024 இல் உள்ள கட்டுமான பரப்பு 500 ச.அடி அதனுடன் மொத்த நிலத்தின் பரப்பளவான 3 கிரவுண்ட் 744 ச.அடியில் பிரிக்கப்படாத பங்காகிய 331 ச.அடி பரப்பளவும் சேர்ந்த T.S.No.34, பிளாக் எண்.44, எண்.109, புலியூர் கிராமம், எழும்பூர்– நுங்கம்பாக்கம் வட்டம், சென்னை மாவட்டத்தில் உள்ள சொத்தின் எல்லைகள்: வடக்கில்: கதவு எண்.104 –ஐ கொண்ட குடியிருப்பு மற்றும் நிலம், ரங்கராஜபுரம் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600024, T.S.No.33, பிளாக் எண்.44, தெற்கில்: கதவு எண்.106 –ஐ கொண்ட குடியிருப்பு மற்றும் நிலம், ரங்கராஜபுரம் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600024, T.S.No.35/1 மற்றும் 35/6, கிழக்கில்: கதவு எண்.3 மற்றும் 4 –ஐ கொண்ட குடியிருப்பு மற்றும் நிலம், புத்தா தெரு, கோடம்பாக்கம், சென்னை–600024, T.S.No.36, பிளாக் எண்.44, மேற்கில்: திருமதி.ஜிடா அருளையா மற்றும் பிறருக்குச் சொந்தமான சொத்து. மத்திய சென்னை பதிவு மாவட்டம், கோடம்பாக்கம் சார் பதிவு மாவடத்தில் உள்ள சொத்து.

| | | | |
|---|---|---|---|
| சொத்தின் உரிமையாளர்: | திரு.N.இளங்கோ, த/பெ, திரு.T.G.நித்தியானந்தம் | | |
| 13 (2) கோரிக்கை அறிவிப்பு நாள்: 20.04.2022 | கையக சுவாதீன நாள்: 31.12.2025 | 15.04.2026 தேதியின்படி நிலுவை: ரூ.37,42,152/– (ரூபாய் முப்பத்தேழு லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து நூற்று ஐம்பத்திரண்டு மட்டும்) | |
| நிர்ணய விலை: ரூ. 33,00,000/– (ரூபாய் முப்பத்து மூன்று லட்சம் மட்டும்) | முன்வைப்பு தொகை:– நிர்ணய விலையில் 10% ரூ. 3,30,000/– (ரூபாய் மூன்று லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) | ஏலம் உயர்த்தும் தொகை:– ரூ. 20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) | சொத்து பார்வையிடல் மற்றும் நேரம்:– மேலே குறிப்பிட்ட அதிகாரப்பூர்வ அதிகாரியின் கைபேசி எண்கள் மூலம் பெறப்பட்ட முன் அனுமதியின்பேரில் |
| கணக்கு விவரங்கள்:– | கணக்கு எண்:– 344905001084, பயனாளி பெயர்:– ஓம்காரா PS06/2021–22 டிரஸ்ட், வங்கி பெயர்:– ஐசிஐசிஐ வங்கி, பாந்த்ரா (கி), மும்பை, ஐஎப்எஸ்சி குறியீடு: ICIC0003449 | | |
| ஏலத்தேதி மற்றும் நேரம்:– 20 மே 2026 (புதன்கிழமை) காலை 12.00 மணி முதல் நண்பகல் 1.00 மணி வரை | | ஏலத்தில் பங்கேற்பதற்கான கடிதம்/ சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்/ கேஒய்சி ஆவணம்/முன்வைப்பு தொகைக்கான ஆதார ஆவணம்:– 18 மே 2026 (திங்கள் கிழமை) மாலை 4.00 மணி அல்லது அதற்கு முன்பாக | |

ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனை விண்ணப்பத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டு கடனீந்தோரின் (OARPL) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநரின் இணையதளம் அதாவது http://bankauctions.com –ஐ பார்வையிடவும்

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) கீழ் r/w 9(1) விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு**

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6), r/w 9(1) மற்றும் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிகளின் கீழ், செலவு & செலவினங்களுடன் சேர்த்து இங்கே மேற்குறிப்பிட்டவாறு நிலுவைத்தொகைகளை செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்கும் அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் பொது ஏலம் மூலம் விற்பனை நடைபெறுவது குறித்து தகவல் அளிக்கும் 30 (முப்பது) நாட்கள் கட்டாய அறிவிப்பும் ஆகும். பணம் செலுத்தத் தவறினால், நிதிச்சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் புனரமைத்தல் மற்றும் 16.04.2026 தேதி முதல் கூடுதல் வட்டியுடன் சொத்துகளை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் மின்–ஏலத்தின் மூலம் செயல்படுத்தவும் அதிகாரப்பூர்வ அதிகாரி / கடனீட்டு கடனீந்தோரின் தனிவிருப்ப முடிவில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

(வி.எம்.திவாகரன்) அதிகாரப்பூர்வ அதிகாரி,
கைபேசி எண். 99623 33307
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்,
(ஓம்காரா பிஎஸ் 06/2021–22 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)

நாள்: 16.04.2026
இடம்: சென்னை